**NFTE-BSNL**
**Tamil Nadu Circle**

# ஊதிய மாற்ற உடன்பாடும் உத்தரவும்

ஒன்றுபட்ட போராட்டம் ஊதிய மாற்ற உத்தரவை கொணர்ந்துள்ளது. ஊதிய உயர்வும் நிலுவையும் பெறப் போகிற அனைத்து ஊழியர்களுக்கும் நமது நல் வாழ்த்துக்கள். JAC க்கு நமது நன்றி.

மே 7 அன்று உடன்பாடு ஏற்பட்டு உத்தரவும் வெளியாகியுள்ளது. ஊதிய காலம் (Periodicity) Co-terminus with that of Executives என்பது உடன்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. பரிந்துரையில் இடம் பெற்றிருந்த 5 ஆண்டுகள் கோரிக்கை என்பது உடன்பாட்டில் இடம் பெறவில்லை. அடுத்த ஊதிய மாற்றம் DPE வழிகாட்டுதல் படி அமையும் என்பது அதிகாரிகளுக்கு மார்ச் 5, 2009ல் வெளியிடப்பட்ட ஊதிய மாற்ற உத்தரவில் இடம் பெற்றிருக்கிறது. நமக்கு வந்துள்ள ஊதிய உத்தரவில் Periodicity குறித்து எந்த வரியும் இல்லை.

ஊதியங்கள் கீழ்க்கண்டவாறு திருத்தப்படுகின்றன.

| ஊதியம் | 01.10.2000(பழைய ஊதியம்) | 01.01.2007(புதிய ஊதியம்) |
|---|---|---|
| NE1 | 4000- 5800 | 7760-13320 |
| NE2 | 4060- 5935 | 7840-14700 |
| NE3 | 4100- 5975 | 7900-14880 |
| NE4 | 4250- 6200 | 8150-15340 |
| NE5 | 4550- 6650 | 8700-16840 |
| NE6 | 4720- 6970 | 9020-17430 |
| NE7 | 5700- 8100 | 10900-20400 |
| NE8 | 6550- 9325 | 12520-23440 |
| NE9 | 7100-10100 | 13600-25420 |
| NE10 | 7800-11175 | 14900-27850 |
| NE11 | 8570-12245 | 16370-30630 |

அதிகாரிகளை விட குறைவான ஊதியக் கட்டுமானம் நடைபெற்றுள்ளது. துவக்க ஊதியத்தில் மாற்றம் அதிகாரிகளைப்போல 1.91 என்று இருந்தாலும் இறுதி ஊதியத்தில் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட 2.77 மடங்கு என்பது குறைக்கப்பட்டு 2.3 லிருந்து 2.5 என்பதாக அமைந்துள்ளது. 9200, 9850 ஊதிய நிலைகள் DOT ஒப்புதலுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என்பது உடன்பாட்டில் preamble பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மத்திய அரசு ஊழியர்களின் புதிய ஊதியத்தை (6வது ஊதியக் குழு) ஒப்பிடுகையில் நமது ஊதிய நிலைகள் கீழிறக்கப்பட்டுள்ளன. 2002ல் நாம் பெற்ற IDA ஏற்றத்திற்கான விகிதங்களை அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தால் உயர்த்த

முடியாவிட்டாலும், காப்பாற்ற முடியவில்லை. குறிப்பாக 7100 ஊதியம் பெறுவோர் (TTA, OTBP Sr TOA) CDA சம்பளத்திற்கே கீழிறக்கப்பட்டுள்ளனர்.

**புதிய கிராக்கிப்படி** 01.01.2007 அன்று பூஜ்யமாகும். DPE வழிகாட்டுதல் படி புதிய கிராக்கிப்படி அமையும். 68.8 மட்டுமே தரப்பட்டுள்ளதால் 100 சத ஈடு என்பது இல்லாமல் போகிறது. 78.2 அதிகாரிகளுக்கு முடிவாகும்போது நமக்கும் நீட்டிக்கப்படும் என்பது உடன்பாடு.

01.01.2007 முதல் வேலை நியமனம் பெற்றோர் புதிய ஊதியத் துவக்கத்தில் வைக்கப்படுவர். 01.01.2007ல் அவர்கள் பெறக்கூடிய fitment கூடுதலாக இருக்குமெனில் கூடுதல் ஊதியம் Personal pay ஆகவே வைக்கப்படுகிறது. இதனால் இந்த தோழர்கள் நட்டமடைவர்.

**புதிய அடிப்படை ஊதியம்**= 01.01.2007 அடிப்படை ஊதியம் * 1.688 * 1.3 என்ற கணக்கீட்டில் அமையும். **குறைந்த பட்ச ஊதிய உயர்வு** குறித்து எந்த உறுதி மொழியும் உடன்பாட்டில் இல்லை. கடந்த உடன்பாட்டில் ரூ1500 என்று பெற்றிருந்தோம்.

**தேக்க ஊதியம்** (stagnation) 3 முறை 2ஆண்டுக்கொரு முறை வழங்கப்படும்.
**பதவி உயர்வின்** போது 3 % அளவு Notional increment வழங்கப்படும்.

**01.01.2007ல் increment பெறுவோர்** புதிய அடிப்படை ஊதியத்தில் பெறலாம். 10% பதவி உயர்வு பெற முடியாதோருக்குத் தரப்படுகின்ற ஒரு இன்கிரிமென்ட் 01.01.07க்கு முன்பு பெற்றிருந்தால் புதிய ஊதிய கணக்கீட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். 01.01.07க்குப் பின்னால் எனில் 3% இன்கிரிமென்டாக தரப்படும்.

**ஊதியத்திருத்தத்தை** 01.01.2007அன்றிலிருந்தோ ஆண்டுயர்வுத் தொகை பெறும் தேதியிலிருந்தோ 01.01.2007 க்குப் பின்னர் பதவி உயர்வு பெறும் தேதியிலிருந்தோ பெறுவதற்கு **விருப்பம்** தெரிவிக்கலாம்.

ஊதிய மாற்றத்தில் 2 stages bunch ற்கு ஒரு increment பலனுண்டு

HRA 27.02.2009 முதல் வழங்கப்படும். 2002 உடன்பாட்டின் போது ஊதிய திருத்த தினமான 01.10.2000 லிருந்தே நாம் பெற்றோம். CCA 27.02.2009 முதல் நிறுத்தப்படும்.

**படிகளில்** மாற்றம் ஏதுமில்லை. 01.01.2012க்குப் பின்னரோ அல்லது அதிகாரிகளுக்கு மாற்றப்படும் போதோ பரிசீலிக்கப்படும் என்பது உத்தரவாகியுள்ளது. குறிப்பாக Transport Allowance மாற்றமில்லாதது பெரும் ஏமாற்றமாக அமைந்துள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் பாராட்டக் கூடிய மாற்றத்தை Transport Allowance ல் பெற்றுள்ளனர்.

சைக்கிள் பராமரிப்பு, சலவைப்படி 50 சதம் உயர்த்தப்படுகிறது. ஆனால் 07.05.2010லிருந்து தான் அமுலுக்கு வருகிறது. பரிந்துரைதேதி ஜனவரி 15, 2010 முதல் கிடைக்கும் என அங்கீகரிக்கப்பட சங்கம் தவறான தகவலை பரப்பிவந்தது. நாம் வாங்கிக் கொண்டிருக்கின்ற Food Allowance நிறுத்தப்படுகிறது.

**திறமை உயர்வு படி** அதிகாரிகளுக்கு உள்ளது போலவே 2 சதம் வழங்கப்படும். இதனால் அடிமட்ட ஊழியர்கள் நட்டமடைவார்கள். **MRS** குறித்து உடன்பாட்டிலோ உத்தரவிலோ ஏதும் சொல்லப்படவில்லை. அதிகாரிகளுக்கு வந்தது போல் தனியாக உத்தரவு வெளியாக வேண்டிய அவசியமுள்ளது.

**விடுப்பு விதிகளில்** மாற்றமில்லை. **பேறு கால விடுப்பு** 135 லிருந்து 180 ஆக உயர்த்தப்படும்.

**போனஸ்:-** புதிய திட்டம் வகுக்கப்படும். Performance Management system கவனத்தில் கொண்டு திட்டம் அமையும் என்று உடன்பாடு வந்துள்ளது. உத்தரவிலும் டெம் பெற்றுள்ளது.

- **ஓய்வு கால பலன்கள்:-** மிகவும் பொதுவான வாசகங்கள் மட்டுமே உடன்பாட்டில் இடம் பெற்றுள்ளது. DOT யிலிருந்து வந்தவர்கள் 37Aதகுதி பெற்றவர்கள் என்றும் BSNL ல் நியமனம் பெற்றவர்கள் EPF 1952 படி ஓய்வு கால பலன்களை பெறுவர் என்று மட்டுமே சொல்லப்பட்டுள்ளது. புதிய IDA ல் 37A படி ஓய்வூதியம் பெறுவர் என்று வெளிப்படையான வாசகம் இல்லை.

- DOT ஆல் 2006ல் ஏற்கப்பட்ட regularized ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பென்ஷன் உத்தரவாதம் இவ்வுடன்பாட்டின் மூலம் பறிக்கப்பட்டுள்ளது. இவ்வுடன்பாட்டின் preamble ல் ஜூன் 15, 2006 உத்தரவின் 60 சத வரம்பு நிபந்தனையாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

- மார்ச் 5, 2009 அதிகாரிகளுக்கான ஊதிய மாற்ற உத்தரவில் FR 116 படி மட்டுமே பங்களிப்பு என்பது சரியாக சொல்லப்பட்டுள்ளது. நமக்கு போடப்பட்ட உத்தரவில் பென்ஷன் குறித்து எதுவும் இடம் பெறவில்லை. பென்ஷன் பங்களிப்பு புதிய ஊதியத்தில் FR 116 படி என்பதற்கு எந்த உத்தரவும் தற்போது இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

கடந்த ஊதிய உடன்பாட்டில் (2002ல்) சொல்லப்பட்டிருந்த "for the purpose of reckoning emoluments for calculation of pension and pensionary benefits the emoluments as defined CCS pension rules, in PSU in the IDA Pay scales shall be treated as emoluments" என்பது இம்முறை உடன்பாட்டில் இடம் பெறவில்லை. அதே

போல் DOT ன் ஆக, 12, 2009 உத்தரவின் Applicability of 6th CPC என்பதும் இடம் பெறவில்லை.

01.01.07 அன்று ஒய்வுதியம் பெறுவோரின் பென்ஷன் உயர்வு பிரச்சனை DOT ன் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக preamble ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Gratuity**;- DOT யிலிருந்து வந்தவர்களுக்கு மத்திய அரசாங்க உத்தரவுப்படி அமையும். BSNL நேரடி ஊழியர்களுக்கு 1972 சட்டப்படி அமையும் என்பது உடன்பாடாகியுள்ளது. நாம் பெற்ற Gratuity மாற்றங்களை நேரடி ஊழியர்கள் பெற BSNL Gratuity விதிகளில் திருத்தம் தேவை.

நாம் பெற்ற முன்பணம் நிலுவைத் தொகையில் இருந்து குறைத்துக் கொள்ளப்படும். புதிய ஊதியத்தை விரைவில் நிர்ணயிக்க உத்தரவு வழிகாட்டியுள்ளது. ஊழியர்களிடம் Under taking வாங்கிக் கொண்ட பிறகு நிலுவைத் தொகையை பட்டுவாடா செய்ய வேண்டும் என்று உத்தரவில் சொல்லப்பட்டுள்ளது.

இம்முறை பதவி உயர்வுக் கொள்கை ஊதியத் திருத்த பேச்சு வார்த்தையிலிருந்து வெளியேற்றப்பட்டு Separate track ஆக மாற்றப்பட்டுள்ளது. சில கேடர்களின் upgradation தனியாக நிர்வாகத்தால் எடுத்துக் கொள்ளப்படும் என்று உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிக்கலாசாரம் தொடர்பாக நிர்வாகம் எடுக்கும் அனைத்து முன்முயற்சிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் முழு ஒத்துழைப்பை தரும் என்று ஒப்புக் கொண்டுள்ளது. தேவையைப் பொறுத்து ஊழியர்களை பயிற்சிக்கு அனுப்புவது ஏற்கப்பட்டுள்ளது.

*ஊதியத் திருத்தத்திற்கு ஆகும் செலவு என்ன என்பது தெரிவிக்கப்படவில்லை.
*பென்ஷன் புதிய IDA ல் பெறுவதற்கு தடை ஏதுமில்லையா? Max Pension க்கான உத்தரவு என்ன?
*78.2 முடிவாக மெக்கானிசம் என்ன?
*போனஸிற்கு Performance Management system ஆல் சாதக பாதகமென்ன?
* கேடர்களின் upgradation எந்த வகையில்?
*பணிக்கலாசாரத்திற்கு நிர்வாகம் எடுக்கப்போகும் முன்முயற்சிகள் என்னென்ன?

அனைத்து சங்கங்களும் இணைந்து நின்றால் சாதகமான பதிலைப் பெறமுடியும். ‘தனிவழி’ சினிமா வசனங்கள் முன்னேற உதவாது.

8-5-2010